[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2020 செப்டம்பர் 16

எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. நாம் இணைந்து, அந்த வெற்றியை இன்றைக்குப் பெற்றிருக்கிறோம். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில், Government of India ஒரு committee அமைக்க வேண்டுமென்றும், அதற்கு நீங்கள் nominee கொடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். சுகாதாரத் துறையில் மூத்த அனுபவம் கொண்ட, துறையில் பல ஆண்டுக்காலம் பணியாற்றிய மரியாதைக்குரிய திரு. உமாநாத், இ.ஆ.ப. அவர்களை nominee ஆக நியமித்திருக்கிறோம். மற்றபடி, எப்பொழுதெல்லாம் கூட்டம் கூட்டப்படுகிறதோ, அந்தக் கூட்டத்தில் அரசுச் செயலாளர்கள் கண்டிப்பாக இருப்பார்கள் என்பதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. அந்த வழக்கிலே, நாம் வாதாடி, போராடி, சட்டப் போராட்டம் நடத்தி, உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் எப்படி இதை நிலைநிறுத்தினோமோ அதேபோல, இந்த Committee-லும் ஆணித்தரமான வாதங்களை, அரசு தரப்பு நியாயங்களை, நீங்கள் சொன்ன அந்த உணர்வுகளோடு சேர்த்து, எடுத்து வைத்து, நீங்கள் சொன்ன இந்த 50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை அரசு நிச்சயமாகப் பெற்று, நம்முடைய தமிழ் மாணவர்களுக்கு, நம்முடைய மண்ணைச் சார்ந்த மாணவர்களுக்கு, மருத்துவத்தில் M.D., M.S., M.Ch. போன்ற Super Speciality மருத்துவ இடங்களைப் பெற்றுத் தருவதற்கு உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், திருமழப்பாடியில் துணை சுகாதார நிலையம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அரசுக் கொறடா, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. சு. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், திருமழப்பாடி ஊராட்சியில்

2020 செப்டம்பர் 16] [திரு. சு. ராஜேந்திரன்]

அரசு துணை சுகாதார நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டி, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அரசுக் கொறடா அவர்கள், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்ற அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை தொடர்ந்து மன்றத்தில் பிரதிபலித்திருக்கிறார். அதை இந்த ஆண்டு மாண்புமிகு அம்மாவுடைய அரசு கனிவோடு பரிசீலனை செய்து, அமைப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கும். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த 2000* mini clinics*-ஐயும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அவசியம் செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12-55

6. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

(ஆ) விவசாயிகளுக்கான பிரதமரின் கிஸான் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. விவசாயிகளுக்கான பிரதமரின் கிஸான் திட்டம் குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. ரா. தமிழ்ச்செல்வன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. அர. சக்கரபாணி, திரு. கு. பிச்சாண்டி, முனைவர் க. பொன்முடி, திரு. தா. உதயசூரியன், முனைவர் கோவி. செழியன், திரு. க. அன்பழகன், திரு. துரை. சந்திரசேகரன், திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. அ. சௌந்தரபாண்டியன், திரு. மு.பெ. கிரி, திரு. எ.வ. வேலு, திரு. இரா. ராஜேந்திரன், திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. கே.என். நேரு, திரு. எம். இராமச்சந்திரன், காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. கரி. இராமசாமி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. செ. ராஜேஷ் குமார், திரு. வி.எஸ். காளிமுத்து, திரு. ச. பாண்டி, திரு. ஆர். கணேஷ் ஆகியோர் விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து சுருக்கமாக கருத்துகளைச் சொல்லும்படி கட்சிக்கு ஒருவர்*